திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வசிக்கும் திரு. பாலகிருஷ்ணன் கதாதரி, திருமதி பாலகிருஷ்ணன் கதாதரி, திரு. ஜி. ராமன் ஆகியோர் அந்த நிறுவனத்தினுடைய பங்குதாரர்கள். ஆனால் இந்த நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க முடியாததற்குக் காரணம், இது சிறு தொழில் இயக்குநருடைய அலுவலகத்தில் பதிவு செய்யப்பெறவில்லை என்பதுதான்.

[முற்பகல் 10-10]

திரு. சி. கேசவ ஆதித்தன் : இந்தத் தொழிற்சாலை என்ன மூலப் பொருளைத் தயாரிக்க நிறுவப்பட்டது? அங்கே வேலை பார்த்து வந்த தொழிலாளர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அது கெமிக்கல்ஸ் சம்பந்தமான நிறுவனம். இன்றைய தினம் அவர்கள் டி.ஐ.சி. அல்லது டைரக்டர் ஆப் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்ஸ்ட்டூட் ஆகியவற்றை அணுகினால் மீண்டும் அந்த நலிந்த ஆலையை வங்கி உதவியோடு திறக்க ஆவன செய்யப்படும்.

திருவண்ணாமலைப் பகுதியில் இரும்பு எடுக்கும் சாத்திய கூறுகள் பற்றிய ஆய்வு

*வினா எண். 521—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள மலைப் பகுதிகளில் இரும்பு எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி அறிய ஜப்பான் நாட்டு நிபுணர்களால் ஆய்வு ஏதேனும் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 1972 ஆம் ஆண்டில் ஜப்பானிய நாட்டிலிருந்து திருவாளர்கள் மாருபேனி கார்ப்பரேசன் (Tvl. Marubeni Corporation) நிறுவனத்தாரின் கனிம இயல் ஆய்வாளர் ஒருவர் திருவண்ணா மலைக்கருகில் உள்ள கவுத்திமலை, வேடியப்பன் மலைப் பகுதி களில் இரும்புக் கனிமங்கள் கிடைக்கும் பகுதிகளைப் பார்வை யிட்டார்.

1981 மார்ச் 27]

(ஆ) திருவாளர்கள் மாருபேனி கார்ப்பரேசனைச் சார்ந்தவர்கள் மேற்சொன்ன மலைப் பகுதிகளில் கிடைக்கும் இரும்புக் கனிமங்களைப் பரிசோதனை செய்வதற்காக ஒரு ''மாதிரிப் படிவம்'' (S mple) எடுத்துச் சென்றார்கள். இந்நிறுவனமானது, இம்மலைகளிலிருந்து தோண்டியெடுத்து, அரைக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்ட மணல் போன்ற இரும்புக் கனிமங்களையே Ground, beneflci t.d course sand like conc ntrat s வாங்க விரும்பு கிறது. மற்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட தரம் குறைந்த இரும்புக் கனிமங்களுடன் இவைகளைக் கலந்து உபயோகிக்கவே இந்தக் கனிமங்கள் தேவைப்பட்டன. இதற்காக இம்மலைகளில் சில பகுதிகளில் மட்டுமே கிடைக்கும் தரத்தில் உயர்ந்ததாகவும், இருப்பு அளவில் (R s rves) அதிகமாகவும் மற்றும் எளிதாக வெட்டி எடுக்க முடிந்ததாகவும் உள்ள கனிமங்களையே வாங்க இந்நிறுவனம் விரும்பியது. இதனால் இம்மலைகளின் மற்றப் பகுதிகளில் கிடைக்கும் கனிமங்களை, உபயோகப்படுத்த முடியாமல் கனிம சேதம் செய்ய வேண்டிய நிலைமை நேரிடும். இம் மலைகளில் கிடைக்கும் எல்லா இரும்புக் கனிமங்களையும் பயன் படுத்த தரம் உயர்த்தப்பட்ட இரும்புக் கனிம உருண்டைகள் செய்யும் தொழிற்சாலையை (Pellet sat ou plant) நிறுவி அவைகளை ஏற்றுமதி செய்வதற்கு, அரசோடு யாதொரு உடன்பாடும் கொள்ள இந்நிறுவனம் முன்வரவில்லை. எனவே, அரசும் இது பற்றி மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்த இணக்கம் தெரிவிக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: 1972 ஆம் ஆண்டு ஆய்வாளர் ஒருவர் அங்கே வந்து பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசினுடைய அனுமதியைக் கேட்டதாகவும் அப்போது சொல்லப்பட்டது. இந்த அரசு இப்போது மத்திய அரசின் அனுமதி பெற்று வேறு ஏதாவது தொழில் அதிபர்களோடு கூட்டு சேர்ந்தாவது அந்த ஆலையைத் துவங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது மாநில அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றாவது அந்தத் தொழிலை ஆரம்பிக்க, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற வகையில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கமுன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இரும்புக் கனி குறிக்கப்பட்ட கனிமமாக இருப்பதால் இரும்புக் கனிமங்களைக் கொண்டு எஃகு தொழிற்சாலை அமைக்கும் கொள்கை, அதிகாரம் மத்திய அரசிடம்தான் உள்ளது. அவர்கள் இதை ஜம்ஷட்பூரில் உள்ள நிறுவனத்திடம் ஒப்படைத்து ஆய்வு நடந்திருக்கிறது ஏற்கனவே ஒரு தடவை. அந்த ஆய்வின் அடிப்படையில் அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இல்லை; மற்ற மாநிலங்களில் கிடைக்கிற இரும்பு கனிமங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது

மிகக் குறைந்த அளவில் கிடைப்பதாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதை கைவிட்டிருக்கிறது. இருந்தாலும் கூட மீண்டும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி திருவண்ணாமலைப் பகுதியில் மீண்டும் ஒரு ஆய்வை நடத்துவதற்கு மீண்டும் கேட்கும்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : மத்தியில் அப்போதிருந்த அரசாங்கத்தைக் கேட்டதற்கு அவர்கள் என்ன பதில் தந்தார்கள். அதற்குப் பிறகு இந்த மாநில அரசு ஏதாவது நடவடிக்கைகள் இதுவரை எடுத்திருக்கிறதா ? இந்த இரும்பு சேலத்தில் இருக்கிற இரும்பை விட நல்ல இரும்பாக இருப்பதாக திருவண்ணாமலைப் பகுதியில் சொல்லப்படுகிறது, அது உண்மையா? ஆகவே இனிமேலாவது வேகமாக நடவடிக்கைகள் எடுத்து இங்கு ஆலையைத் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் அவர்களுக்குத் தெரிந்த தகவலை வைத்துச் சொல்கிறார்கள். ஜம்ஷட்பூரில் இருக்கிற மத்திய அரசு நிறுவனம் நடத்திய ஆய்வில் சொல்லப்பட்டுள்ளதை நான் சொல்கிறேன். ஆய்வு செய்யப்பட்டு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, மேற்கொண்டு இந்த நிறுவனம் இயங்காமல் தடை பட்டது. இந்த அரசு திருவண்ணாமலைப் பகுதியில் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் எவ்வளவு ஏக்கர்கள் அளவுக்கு இந்தக் கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன ? சேலம் உருக்காலையோடு இதை இணைப்பதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா ? இது குறித்து தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஏதாகிலும் கூறி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், இந்தப் பகுதியிலே கிடைக்கின்ற இரும்பு கனிமத்தின் தரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அது பொருளாதார ரீதியில் இலாபகரமாக இல்லாத காரணத்தினால், ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டமே கைவிடப்பட்டது. எனவே, சேலம் உருக்காலையோடோ, மற்றப் பகுதிகளை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் இல்லை. எனினும் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆகவே, மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.